செய்தி வெளியீடு எண்: 149 நாள் : 2/3/2016

# செய்தி வெளியீடு

## சென்னை மாநகராட்சி வரிகளை டெபிட் கார்டு மற்றும் கிரெடிட் கார்டு மூலம் செலுத்தும் புதிய வசதி அறிமுகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் அரசு இ–சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. தலைமைச் செயலகம், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம், சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்கள், அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் அனைத்து கோட்ட அலுவலகங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள் என மொத்தம் 486 இடங்களில் அரசு இ–சேவை மையங்களை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அமைத்து நிர்வகித்து வருகிறது.

2. சென்னை மாநகராட்சி தலைமையிடம், சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்கள், அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் அனைத்து கோட்ட அலுவலகங்கள் ஆகிய அலுவலக வளாகங்களில் நிறுவப்பட்டுள்ள அரசு இ–சேவை மையங்களில் சொத்து வரி, தொழில் வரி மற்றும் நிறுவன வரி ஆகியவற்றை தற்போது வங்கி வரைவோலையாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தும் வசதி நடைமுறையிலுள்ளது. இந்த வசதியினை பயன்படுத்தி இதுவரை 1,18,192 நபர்கள் பல்வேறு வரிகளை செலுத்தி உள்ளனர். அவ்வகையில் இதுவரை ரூ. 54,05 ,88,622 /– வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த வசதியினை மேம்படுத்தும் விதமாக **டெபிட் கார்டு** மற்றும் **கிரெடிட் கார்டு** மூலமாகவும் வரிகளைச் செலுத்தும் வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென பிரத்தியேக கருவிகள் அனைத்து இ–சேவை மையங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. டெபிட் கார்டு மூலம் வரி செலுத்தும்போது அதற்கென்று தனியே சேவைக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படமாட்டாது. அனைத்து வங்கிகளுடைய டெபிட் கார்டுகளையும் பயன்படுத்தலாம். கிரெடிட் கார்டுகளை பயன்படுத்தும் போது 1.5% சேவைக் கட்டணம் மற்றும் அதற்குண்டான சேவை வரி வசூலிக்கப்படும். எனவே, பொதுமக்கள் இந்த சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9னு**